


சூடான் அரசாங்கத்தைச் சுருட்டிப் பொட்டலம் கட்டித் தன் தலைப்பாகைக்குள் வைத்துக்கொண்ட பிறகு, ஒசாமா பின்லேடன் ஒரு வினாடி கூடத் தாமதம் செய்யவில்லை. சவூதி அரேபியா, எகிப்து, ஜோர்டன், லெபனான், ஈராக், ஓமன், அல்ஜீரியா, துனீஷியா, லிபியா, மொராக்கோ, சோமாலியா. ஆக மொத்தம் பதினொரு நாடுகள் ஆச்சா? இந்தப் பதினொரு இடங்களிலும் நல்ல நாள் பார்த்துப் பால் காய்ச்சி சாப்பிட்டுவிட்டு, அல் காயிதாவின் கிளைகளைத் தொடங்கிவிட்டார்.

ஏற்பாடு இதுதான். ஷேக் உமர் அப்துர் ரஹ்மான் ஒவ்வொரு நாடாகப் போவார். உலகெங்கும் கஷ்டப்படும் முஸ்லிம்களைப் பற்றிய கண்ணீர்க் கதைகளை உணர்ச்சிமயமாக எடுத்துச் சொல்லி இளைஞர்களை வசீகரிப்பார். அவர் போய்வந்த சூட்டோடு ஜவாஹிரி ஒரு ரவுண்டு போவார். ஆர்வமும் துடிப்பும் மிக்க இளைஞர்களை ஒருங்கிணைத்து ஓர் அமைப்பாக இருந்து செயல்பட ஓர் இடத்தையும் ஏற்பாடு செய்து கொடுத்துவிட்டு, அல் காயிதாவின் சித்தாந்தங்களை அவர்களுக்குப் போதிப்பார். பொதுவாக ஷேக்கின் முதல் சுற்றுப் பேச்சுகளிலேயே இளைஞர்கள் மயங்கி, என்ன சொன்னாலும் தலையாட்டத் தயாராகிவிடுவார்கள். ஜவாஹிரியின் நரம்புகளைச் சுண்டும் வீராவேசச் சொற்பொழிவையும் கேட்டபிறகு கையோடு கிளம்பிச் சூடானுக்கு வரத் தயாராகிவிடுவார்கள்.

தவிரவும் தனி விமானத்தில் பறந்துவந்து இயக்கத்துக்கு ஆள் சேர்க்கும் ஒரே அமைப்பு, உலகத்தில் அல் காயிதாவாக மட்டுமே இருக்கமுடியும் என்கிறபடியால், இயல்பாகவே முஸ்லிம் இளைஞர்கள் மத்தியில் ஒருமாதிரியான பரவசமும் பிரமிப்பும் அப்போது இருந்தது என்பதை மறுக்கமுடியாது.

அது ஒரு சுவாரசியமான கதை.

உலகம் முழுக்கப் போய் அல் காயிதாவைப் பரப்பவேண்டும். ஊருக்கு ஊர், நாட்டுக்கு நாடு ஆள் பிடிக்க வேண்டும். அது மட்டுமல்லாமல் ஏற்கெனவே இருக்கும் இயக்கங்களுடன் நட்பு வளர்க்கவும் வேண்டும். மேலும் நிதி சேர்ப்பு நடவடிக்கைகள். இதெல்லாம் பொடிநடையாக வண்டி கட்டிக்கொண்டு போய் நடக்கிற காரியமா என்ன?

ஆகவே ஒசாமா ஓர் உபாயம் செய்தார். துராபியிடம் பேசி, சூடான் தேசத்துக்குச் சொந்தமான ஓர் அரசாங்க விமானத்தைக் குத்தகைக்கு எடுத்துக்கொண்டார். அந்த விமானத்துக்கான பராமரிப்புச் செலவுகள் அத்தனையும் அல் காயிதாவைச் சாரும். ஜவாஹிரியோ, ஷேக் உமர் அப்துர் ரஹ்மானோ, வேறு யாரோ எங்கு போகவேண்டுமானாலும் அந்த விமானத்தில் போவார்கள். ஆனால், அல் காயிதாவின் ஆட்கள் தனி விமானத்தில் வந்து இறங்குவதை எந்த தேசத்து விமான நிலையம் வெற்றிலை பாக்கு வைத்து வரவேற்கும்? ஆகவே அதற்கும் ஓர் ஏற்பாடு. அல் காயிதாவினர் புறப்படும்போதெல்லாம் சூடான் அரசின் அமைச்சர்கள் அல்லது உயர்மட்ட அதிகாரிகள் சிலர் ஏதோ வேலை வைத்துக்கொண்டு அந்த விமானத்தில் கூட வருவார்கள்.

அரசாங்கப் பணியாக சூடானிலிருந்து சில அதிகாரிகள் வந்திருக்கிறார்கள் என்பதாகத்தான் மற்றவர்களுக்குச் சொல்லப்படும். சூடானின் 'அரசுக் குழு' உறுப்பினர்களோடு உறுப்பினர்களாக அல் காயிதாவினர் சென்றுவிடுவார்கள். எந்த தேசத்துக்குப் போகிறார்களோ, போய்ச் சேர்ந்ததும் நிஜமான அரசுக் குழுவும் அல் காயிதா குழுவும் ஆளுக்கொரு திசையில் பிரிந்துவிடும். அல் காயிதாவினர் தம் வேலையை முடித்துக்கொண்டு திரும்ப வரும்வரை சூடான் விமானம் சமர்த்தாகக் காத்திருக்கும். சூடான் அதிகாரிகளோ உல்லாசமாக ஊர் சுற்றிப் பார்த்துவிட்டு, நன்றாகச் சாப்பிட்டு உடம்பையும் பார்த்துக்கொண்டு விமான நிலையத்துக்கு வந்து காத்திருப்பார்கள். அவர்கள் ஊர் சுற்றிப் பார்க்கும் செலவெல்லாம் அல் காயிதாவினுடையது.

ஜவாஹிரியும் ஷேக்கும் தம் வேலைகளை முடித்துக்கொண்டு வந்து மீண்டும் சூடான் அரசுக் குழுவுடன் சேர்ந்து விமானம் ஏறி டாட்டா காட்டிவிட்டுப் போய்விடுவார்கள்.

சிந்துபாத் கதைகளில் கூடச் சாத்தியமில்லாத இதெல்லாம், அல் காயிதா விஷயத்தில் சூடான் அரசிடம் சாத்தியமானது என்பது நம்பமுடியாத உண்மை.

1991 மே மாத வாக்கில் ஆரம்பமான இப்பணிகள், மிகச் சில மாதங்களிலேயே சூடு பிடித்து பிரமிக்கத்தக்க வேகத்தில் அல் காயிதா ராட்சஸ வளர்ச்சி காண ஆரம்பித்தது. ஜெர்மனி, பிரான்ஸ், நெதர்லாந்து, ஸ்வீடன், டென்மார்க், அயர்லாந்து, ஆஸ்திரியா என்று பல்வேறு ஐரோப்பிய நாடுகளிலும் அல் காயிதாவின் கிளைகள் வெற்றிகரமாக நிறுவப்பட்டன.

ஆப்கன் யுத்த காலத்தில் டாக்டர் அப்துல்லா அசம், அமெரிக்காவில் தங்கி நிதி வேட்டையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது, அவருக்குப் பெரிய அளவில் ஒத்தாசைகள் செய்த அமைப்பு ஒன்று அமெரிக்காவில் இருந்தது. அதன் பெயர் அல் கைஃபா. அப்துல்லா அசம் கொலை செய்யப்பட்ட பிறகு அவர்கள் வேறு வழி தெரியாமல் 'பொது வாழ்க்கையிலிருந்து விலகி'யிருந்தார்கள். ஒசாமா பின்லேடன் சமயோசிதமாக அவர்களிடம் பேசி 'அல் காயிதாவின் அமெரிக்க வேர்களை ஆழமாக ஊன்றுவதற்கு உதவ முடியுமா? என்று கேட்டார். கசக்குமா என்ன? அவர்களே எப்போது ஒசாமா தங்களை அழைப்பார் என்றுதான் காத்திருந்தார்கள். ஆகவே, 'நீங்கள் கவலையே படவேண்டாம். அமெரிக்காவில் நமக்கு எப்போதும் ஐயாயிரம் பேர் இருப்பார்கள். அதற்கு நாங்கள் உத்தரவாதம்' என்று வாக்களித்தார்கள்.

மறுபுறம் தூரக் கிழக்கு தேசங்களின் நிலைமையை ஆராய்ந்து அங்கும் வலுவான அடித்தளம் அமைப்பதற்காக, பாலஸ்தீனின் காஸா பகுதியில் பிறந்த அபூ சுபைதா என்கிற இருபது வயது இளைஞன் ஒருவனை இந்தோனேஷியாவுக்கு அனுப்பிவைத்தார் ஒசாமா. பின்னாளில் முகம்மது அடஃப் இறந்த பிறகு அல் காயிதாவின் தளபதியாகவே விளங்கி ஏகப்பட்ட நாச காரியங்களை வெற்றிகரமாக நடத்திக்கொடுத்த பெரிய கை அது. இந்த அபூ சுபைதாவுக்கு, மற்ற யாருக்குமில்லாத இரண்டு சிறப்புகள் உண்டு. ஒன்று, ஆயிரத்தெட்டு அயோக்கியத்தனங்களை முன்னின்று நடத்தியவன் என்ற போதிலும் எந்த நாட்டுக் காவல் துறையும் இவன் மீது ஒரு வழக்குக் கூட பதிவு செய்ததில்லை. அதாவது, கழுவுகிற மீனில் நழுவுகிற மீன். இன்னொரு சிறப்பு, மிகச் சாமர்த்தியமாகத் தன் புகைப்படம் எதுவும் அதிகம் வெளியே வராமல் கடைசி வரை பார்த்துக்கொண்டவன். 'தனி நபர்களல்ல; இயக்கமே முக்கியம்' என்கிற ஒசாமாவின் கொள்கைக்கு அப்படியே அர்த்தமாக வாழ்ந்து காட்டியவன் இவன்.

அபூ சுபைதா செய்த மிக முக்கியமான காரியம், இந்தோனேஷியாவில் வேர் கொண்டு கிழக்காசிய நாடுகள் முழுக்கக் கோலோச்சிக்கொண்டிருந்த ஜமா இஸ்லாமியா என்கிற அமைப்புடன் அல் காயிதாவுக்கு ஆரம்ப கட்டத் தொடர்புகளை உருவாக்கியது. செப்டெம்பர் 11 சம்பவத்தின் மிக முக்கியப் பொறுப்பாளரான காலீத் ஷேக் முகம்மது என்கிற குவைத்தைச் சேர்ந்த 'ஃப்ரீலான்ஸ்' தீவிரவாதிதான் (பின்னாளில் அல் காயிதா உறுப்பினராக ஆகிவிட்டவர். இவரைக் குறித்துப் பின்னால் பார்க்கலாம்.) ஜமா இஸ்லாமியாவுக்கும் அல் காயிதாவுக்குமான பலமான கான்க்ரீட் உறவுப்பாலம் போட்டவர் என்றாலும் அவருக்கெல்லாம் முன்னாலேயே இரண்டு இயக்கங்களும்

இணைந்து பணியாற்றுவதற்கான சாத்தியங்கள் இருப்பதைக் கண்டுபிடித்தவன் அபூ சுபைதாதான்.

ஜமா இஸ்லாமியாவின் தலைவர் ரிதுவன் இஸாமுத்தீன். இந்தப் பெயரைச் சொன்னால் அவரது மனைவி மக்களுக்கே சட்டென்று அடையாளம் தெரியாது. ஹம்பாலி என்றால் புரியும். கிழக்காசிய நாடுகளில் ஜிஹாதைப் பரவலாக்குவதை நோக்கமாகக் கொண்டு தீவிரமாக உழைத்துக்கொண்டிருந்தவர். இவரும் சரி, காலீத் ஷேக் முகம்மதுவும் சரி, இந்தத் தொடரில் பல்வேறு இடங்களில் பல்வேறு அமைப்புகளின் சார்பில் இடம்பெறப்போகிற இன்னும் எத்தனை எத்தனையோ தீவிரவாதிகளும் சரி. அத்தனை பேருக்குமே பொதுவான ஓர் ஒற்றுமை என்னவென்றால், இவர்கள் எல்லோருமே ஏதோ ஒரு வகையில் ஆப்கன் யுத்தத்தில் பங்குபெற்றவர்கள். சிலர் ஒசாமாவுக்கு அப்போதே நேரடியாகத் தெரிந்தவர்கள். சிலர் தூர இருந்து பார்த்தவர்கள். சிலர் கடைசி வரை பார்க்காமலேயே காதல் கொண்டவர்களாக இருந்தவர்கள். உதாரணமாக, காலீத் ஷேக் முகம்மது ஆப்கன் யுத்தத்தில் பங்குகொண்ட காலத்தில் ஒரு சாதாரண கடைநிலை சிப்பாய். ஒசாமாவை அவர் ஒரே ஒரு சந்தர்ப்பத்தில் மட்டும் ஒரு பரேடில் பார்த்திருக்கிறார். அவ்வளவுதான். ஹம்பாலி அதுகூடப் பார்த்ததில்லை. அவர் ஆப்கன் யுத்தத்தின்போது போராளிகளுக்கு உணவு சப்ளை செய்த வண்டிகளில் ஒன்றை ஓட்டிக்கொண்டிருந்த ஒரு டிரைவர். பிறகு பிரமோஷன் பெற்று சிப்பாய் ஆனவர். கொஞ்சம் உயர்நிலை சிப்பாய் ஆவதற்குள் யுத்தம் முடிந்துவிட்டபடியால், சமர்த்தாக ஊர் போய்ச் சேர்ந்து அங்கே ஜிஹாத் கனவுகளில் மூழ்கி ஜமா இஸ்லாமியாவை ஆரம்பித்தார். ஒசாமாவின் பலமே இதுதான். 'இஸ்லாமிய சகோதரத்துவம்' என்கிற சித்தாந்தத்தை முன்வைத்துத்தான் அவர் அனைவரையும் அல் காயிதாவுக்கு அழைத்துக்கொண்டிருந்தார். எந்த வழியாக எப்படிப் போனாலும் எங்கோ ஒரு புள்ளியில் அத்தனை பேரும் ஆப்கன் யுத்தத்தில் ஒசாமாவுக்குக் கீழே பணியாற்றியவர்களாகவே இருந்தார்கள். ஆகவே, ஒரு குரல் கொடுத்ததும் ஓடிவர அத்தனை பேருமே தயாராக இருந்தார்கள்.

இவ்வாறாக, சூறாவளி வேகத்தில் உலகம் முழுவதும் அல் காயிதாவின் கிளைகளை நிறுவத் தொடங்கிய பிறகு, இந்த அப்ரண்டீஸ் போராளிகளுக்கெல்லாம் பயிற்சி கொடுக்கும் பணி, ஆரம்பமானது. மூன்று இடங்கள். சூடான் ஒன்று. ஆப்கன் ஒன்று. மொராக்கோ ஒன்று.

ஆப்கனிஸ்தானில் உள்ள கோஸ்ட் (Khost), அல் பத்ர் (Al Badr), அல் கத்பா (Al Katbah) ஆகிய இடங்களில் அல் காயிதாவின் பயிற்சி முகாம்கள் நிறுவப்பட்டன. மொராக்கோவில் டெருண்டா (Derunta) என்ற இடத்தில் ஒரு முகாம் அமைக்கப்பட்டது. சூடானைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். பார்லிமெண்ட் தவிர, மற்ற அனைத்து இடங்களிலும் அல் காயிதா பயிற்சி கொடுக்க அனுமதி இருந்த தேசம் அது.

இந்த மூன்று இடங்களுக்கும் போராளி இளைஞர்களைக் கொண்டுவந்து பயிற்சிகளை ஆரம்பித்தார்கள்.

ஆரம்பத்திலிருந்தே ஒசாமா ஒரு விஷயத்தில் மிகத் தெளிவாக இருந்தார். ஒவ்வொரு தேசத்திலிருந்தும் வரும் இளைஞர்களை ஒரே இடத்தில் வைத்திருப்பதில்லை என்பதே அது. பயிற்சிக்கு மட்டுமல்ல; மிக விரைவில் ஆரம்பமாகவிருந்த தாக்குதல் நடவடிக்கைகளுக்கும் சேர்த்தேதான் இந்த ஏற்பாடு.

இங்கிலாந்தில் உள்ள ஒரு அல் காயிதா செல்லில் இங்கிலாந்து முஸ்லிம் இளைஞர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். மாறாக டுனீஷியாவிலிருந்தும் மொராக்கோவிலிருந்தும் சூடானிலிருந்தும் தான்சானியாவிலிருந்தும் சவூதி அரேபியாவிலிருந்தும் ஆட்கள் போயிருப்பார்கள். இதே சவூதி அரேபியாவை எடுத்துக்கொண்டால் பெரும்பாலும் லெபனான், பாலஸ்தீன், ஜோர்டன் பகுதி இளைஞர்கள்தான் இருப்பார்கள். அமெரிக்க முஸ்லிம் இளைஞர்களை அழைத்துப்போய் பிரான்சிலும் ஜெர்மனியிலும் விட்டுவிடுவார்கள். ஜெர்மனியிலிருந்து ஆட்களைப் பொறுக்கி

துருக்கியில் கொண்டுவந்து உட்காரவைப்பார்கள்.

இந்த ஏற்பாட்டில் சில வியக்கத்தக்க லாபங்கள் உண்டு. முதலாவது மொழி மூலம் கிடைக்கக்கூடிய லாபம். ஒரு தேசத்தில் ஓர் அல் காயிதா கூடாரத்தைச் சேர்ந்த சிலரை, காவல் துறை அல்லது ராணுவம் சுற்றி வளைக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் பேசுகிற பாஷையை வைத்து யார் எந்த நாட்டைச் சேர்ந்தவர் என்றே கண்டுபிடிக்க முடியாது. அவன் அமெரிக்க முஸ்லிமாக இருப்பான். பிறந்து வளர்ந்ததிலிருந்து இங்கிலீஷ் மட்டுமே பேசிக்கொண்டிருப்பவனாக இருப்பான். பிரான்ஸில் பிடிக்கிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். என்னடா இவன், அரபி மொழியே தெரியவில்லையே, இவன் எப்படி அல் காயிதாக்காரனாக இருக்கமுடியும் என்று குழம்பிவிடுவார்கள். சுத்தமான இங்கிலீஷில் பேசியே தப்பித்த அல் காயிதா போராளிகள் பலபேர் ஐரோப்பாவில் உண்டு.

அதே மாதிரி இங்கிலீஷ் வாசனையே இல்லாத கடைந்தெடுத்த பட்டிக்காட்டு சவூதி அரேபிய இளைஞன் ஒருத்தனை இங்கிலாந்தில் பிடித்தாலும் விசாரணை அதிகாரிகளுக்குத் தாவு தீர்ந்துவிடும். அவன் பேசும் நாட்டுப்புறத்து அரபி மொழி, நல்ல அரபி தெரிந்தவர்களுக்குக் கூட சமயத்தில் புரியாது. இதனை உத்தேசித்துத்தான் ஒசாமா இப்படி ஒரு ஏற்பாடு செய்தார். இதற்கு இன்னொரு வலுவான காரணமும் உண்டு. ஒத்த கருத்துள்ள பல்வேறு தேசத்து இளைஞர்களை ஒரே செல்லில் தங்கவைத்துப் பயிற்சி அளிப்பதன் மூலம் ஒவ்வொருவருக்கும் பல்வேறு நாடுகளின் கலாசாரம், பண்பாடு, அரசியல், சமூக நிலவரங்கள் குறித்த அடிப்படை அறிவு கிடைக்கும் என்பதே அது. தவிரவும் ஒரு தாக்குதல் என்று வரும்போது யாருமே யூகிக்க முடியாத இடங்களிலிருந்து, யூகிக்க முடியாத நபர்களை வேறு வேறு இடங்களிலிருந்து பொறுக்கியெடுத்து அனுப்பும்போது, எந்த ஏரியாக்காரர்கள் எதில் எக்ஸ்பர்ட்டாக இருக்கிறார்கள் என்று சுலபமாக அடையாளம் காணமுடியுமே? அதற்கேற்ப பயிற்சி முறையிலும் மாற்றம் தேவைப்பட்டால் செய்யலாமே? ஆ, பயிற்சி! மிக முக்கியமாகச் சொல்லப்படவேண்டிய விஷயம் அது. அல் காயிதா தன் வீரர்களுக்கு அளிக்கும் பயிற்சிகள் குறித்துத் தனியே ஒரு புத்தகமே எழுதலாம். ஒசாமா பின்லேடனே தன் வீரர்களுக்காகக் கையாலேயே ஒரு கோனார் நோட்ஸ் எழுதி வெளியிட்டிருக்கிறார். சி.ஐ.ஏ. உபயத்தில் இன்றைக்கு நமக்கு எளிதில் வாசிக்கக் கிடைக்கும் அந்த அமர காவியம்